சென்னைக் குடிநீர் வாரியம்

செய்தி வெளியிடு எண்:623 நாள்: 24.07.2010

சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ளும் வளர்ச்சிப்பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.7.2010) ஆய்வு செய்தார்.

---

தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தின் மூலம் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் செயல்பாடுகளை இன்று (24.07.2010) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் 450 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீரகற்று நிலையத்தினையும், ஈக்காட்டுதாங்கலில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான நிலையம், மற்றும் நீர் உந்தும் நிலையம் ஆகியவற்றினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருங்குடியில் ஏற்கெனவே அமைந்துள்ள 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினையும் மேலும் பெருங்குடியில் ரூ.51.44 கோடியில் புதியதாக கட்டப்பட்டு வரும் 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினையும் பார்வையிட்டு விரைவாக பணிகளை முடிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பின்னர் காஞ்சிபுரம் மாவட்டம் நெம்மேலியில் கட்டப்பட்டுவரும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தினை பார்வையிட்டு குறித்த காலத்திற்குள் பணிகளை விரைந்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். இவ்ஆய்வின் போது சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் வாரிய உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

***************

**வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**